**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG30 – நிலை III (Grade III)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜனவரி–பிப்ரவரி 2024**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10 x 1 = 10)**

1. நீதி நாயகர் என மக்களால் போற்றப்படுபவர் யார்?
2. மக்கள் வாழ்வில் சிறப்பிடம் பெறுவது எது?
3. நாமக்கல் கவிஞர் பிறந்த ஆண்டு எது?
4. அலைபாயும் மனதிற்கு எது தேவை?
5. விளம்பி நாகனாரின் இயற்பெயர் யாது?
6. பாம்பின் நாக்கு எப்படி இருக்கும்?
7. பாரதியாரின் தந்தை பெயர் யாது?
8. தென்னகர் எனப்படும் நகர் எது?
9. அணி எனும் சொல்லின் பொருள் யாது?
10. பசுவின் இளமை மரபுப் பெயர் என்ன?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. மாயூரம் வேதநாயகம் பிறந்த ஊர் எது?
2. தமிழின் சிறப்பினை ஓர் உவமையின் மூலம் விளக்குக.
3. நிலவை ஏன் போற்ற வேண்டும்?
4. உலக மக்களுக்கு பழியாவது யாது?
5. வாணிகம் செய்வாருக்கு சிறந்த வாணிகம் எது?
6. சிறுபஞ்சமூலம் என்பதன் பெயர்க்காரணம் என்ன?
7. மழை பெய்வதற்கு வேறு அறிகுறிகள் யாவை?
8. தன்னைப் பணிந்தவர்களுக்கு மூன்றாம் நந்திவர்மன் எதைக் கொடுத்தான்?
9. பாரதியாரின் முப்பெறும் படைப்புகள் யாவை?
10. பாரதியார் புதுச்சேரியில் ஏன் வாழந்தார்?

11. மரணத்துள் வாழ்வோம் என்ற நூலைப் பற்றி எழுதுக.
12. நாட்டுப்புறப்பாடல்கள் வெளிப்படத்துவது யாது?
13. ஆகுபெயர் என்றால் என்ன?
14. இயல்பு புணர்ச்சி என்பது யாது?
15. மரபு என்றால் என்ன?

**பகுதி – இ**

**III.** **எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. திருக்குறள் பற்றி குறிப்பு வரைக.
2. ஐந்து அழகுகள் என சிறுபஞ்சமூலம் கூறுவன யாவை?
3. சிலப்பதிகாரம் பற்றிக் குறிப்பு வரைக.
4. சாளை இளந்திரையன் மேன்மை பற்றிக் கூறுவன யாவை?
5. திருஞானசம்பந்தர் சிவன் பற்றி கூறுவன யாவை?
6. தமிழ்நாடு எத்தகைய உயர்நிலையைப் பெற்றிருப்பதாக பாவாணர் கூறியுள்ளார்?
7. மணி எவ்வாறெல்லாம் குறும்பு செய்தான்?
8. காவிரியில் நடக்கும் பதினெட்டாம் பெருக்கு பற்றி விளக்குக.

**பகுதி – ஈ**

**IV.** **ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
***Aswer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. நடுவுநிலைமை அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துகள் யாவை?
2. நாரைவிடு தூது பாடல் கூறும் கருத்துகளை தொகுத்து எழுதுக.
3. தமிழ் பற்றி பாவாணர் கூறியவற்றை தொகுத்து எழுதுக.

**பகுதி – உ**

**V.** **ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. பொருள் எத்தனை வகைப்படும். அவற்றை விளக்குக.
2. செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனின் வீர வரலாற்றை விளக்குக.
3. இயேசு காவியம் குறித்து விவரித்து எழுதுக.

.....